# திருநெல்வேலி மாநகராட்சி

## 2019ம் ஆண்டு ஜூலை மாதம் 1ம் நாள் திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

1) அரசாணை எண் 154, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 20.05.2019–இல் ஓய்வூதியதாரர்கள் / குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு அடிப்படை ஊதியம் / குடும்ப ஓய்வூதியத்தில் 01.01.2019 முதல் 12 சதவிகிதம் ஆக அகவிலைப்படி உயர்வு செய்து பிறப்பிக்கப்பட்டுள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 9

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் சி3/3612/2019)

---

2) அரசாணை எண் 151 நிதி (படிகள்)த் துறை, நாள் 20.05.2019–ல் தமிழக அரசு மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 01.01.2019 முதல் அடிப்படை ஊதியத்தில் 12 சதவிகிதம் அகவிலைப்படி உயர்வு செய்து ஆணை பிறப்பித்துள்ளஅரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 10

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் சி3/3611/2019)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கான பட்டியல் தொகையில் 5% காப்புத் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.எஸ்.செல்வம் அவர்களால் 29.01.2019ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | பணி விபரம் | தொகை (ரூ) | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | Providing distribution main at Srinivasa Nagar A & B Colony in Tvl Ward | 10750 | Main Office Lapsed Deposit Register 2013-14/I P.No.6 |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள 5% காப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/– அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி 5% காப்புத் தொகை ரூ.10750/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.செல்வம் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 11

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ம.எண் 146/12–13–திலி)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி, திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டை மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கான 5% காப்புத் தொகை பட்டியல் தொகையில் பிடித்தம் செய்யப்பட்டதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஜான்ஜெலஸ்டின் அவர்களால் 19.12.2018–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணி விபரம் | தொகை (ரூ) | மைய அலுவலக காலங்கடந்த வைப்புத் தொகை பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | Construction of UGD arrangement at Sundara Vinayagar koil east street W.No.45 | 23376 | 2014-15 P.No.12 |
| 2 | Constn. of ICDS Centre Ganapathiyapuram W.No.11 | 28000 | 2013-14/I/P.No.45 |
| 3 | Constn. of drain & cover slab at Ganapathiyapuram near ICDS Centre W.No.11 | 23984 | 2014-15/P.No.24 |
| 4 | Constn. of UGD arrangement at Yadavar West street | 24476 | 2014-15/P.No.11 |
| 5 | Constn. of drain arrangement at Thirumalai Alwar street ^& back side W.No.4 | 24480 | 2014-15 P.No.39 |
| 6 | Constn of culvert at Post Office road W.No.24 | 17050 | 2013-14/I/P.No.40 |
| | TOTAL | 141366 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள 5% காப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/–க்கு அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி 5% காப்புத் தொகை ரூ.1,41,366/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.ஜான்ஜெலஸ்டின் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 12

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ம.எண் 140/14–15)

---

5) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்ள EMD/FSD தொகை செலுத்தப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.G.ஜெபராஜன் அவர்களால் 25.02.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணி விபரம் | தொகை (ரூ) | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | KfW Roads 2015-16 Package II | 115070 | 2015-16/II/P.No.11 |
| 2 | KfW Roads 2015-16 Package III | 409300 | 2015-16/II/P.No.14 |
| 3 | KfW Roads 2015-16 Package IV | 390330 | 2015-16/II/P.No.14 |
| | TOTAL | 914700 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள EMD/FSD தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/–க்கு அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி EMD/FSD தொகை ரூ.9,14,700/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.G.ஜெபராஜன் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 13

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் KfW Roads 2015-16)

---

6) திருநெல்வேலி மாநகராட்சி தச்சை மண்டலத்தில் கீழ்க்காணும் பணிகளுக்கான பட்டியல் தொகையில் 5% காப்புத் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளதனை திரும்ப வழங்க கேட்டு சம்பந்தப்பட்ட ஒப்பந்ததாரர் திரு.பரமசிவம் அவர்களால் 09.11.2019–ல் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

| வ.எண் | பணி விபரம் | தொகை (ரூ) | பதிவேடு விபரம் |
|---|---|---|---|
| 1 | வா.எண் 6 பகுதிகளில் சிறிய மேல்நிலைத் தொட்டி அமைத்தல் | 23067 | 2014–15 பக்கம் 13 |
| 2 | வா.எண் 55ல் உள்ள பொது கழிப்பிடங்கள் பராமரித்தல் | 24783 | 2011–12 பக்கம் 10 |
| 3 | வா.எண் 4 உடையார்பட்டி மற்றும் மேகலிங்கபுரத்தில் உள்ள கழிப்பிடங்களை பராமரித்தல் | 15263 | 2012–13 பக்கம் 5 |
| 4 | வா.எண் 6, 7 மற்றும் 39 பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்பை ஏற்படுத்துதல் | 12121 | 2014–15 பக்கம் 40 |
| | மொத்தம் | 75234 | |

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட விபரப்படி உள்ள 5% காப்புத் தொகை காலங்கடந்த வைப்புத் தொகையாக ரூ.10,000/–க்கும் அதிகமாக உள்ளது. எனவே நகராட்சி நடைமுறை நூல் விதி 7(10)(i)(ii)–ன்படி 5% காப்புத் தொகை ரூ.75,234/– மட்டும் ஒப்பந்ததாரர் திரு.A.பரமசிவம் அவர்களுக்கு திரும்ப வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 14

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ம.எண் 87/15–16–தச்சை)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள ஆம்னி பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் ஆம்னி பேருந்துகளுக்கு வாகனம் ஒன்றுக்கு 24 மணி நேரத்திற்கு ரூ.200/– என கட்டணம் நிர்ணயம் செய்யவும்,

மேலும் புதிய பேருந்து நிலையத்தில் இரு சக்கரம் மற்றும் மூன்று / நான்கு சக்கர வாகனங்களை வாகன காப்பகத்தில் நிறுத்தம் செய்யாமல் புதிய பேருந்து நிலைய வளாகத்திற்குள் நிறுத்தம் செய்து விட்டு செல்லும் இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.300/–ம், மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு அபராத தொகையாக ரூ.500/–, மற்றும் பேருந்து நிலைய வளாகத்திற்குள்

புகை பிடித்தல் மற்றும் திறந்தவெளியில் சிறுநீர் கழித்தால் ரூ.100/— அபராத விதிக்கவும் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

| வ. எண் | இனவிபரம் | உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டண விபரம் |
|---|---|---|
| 1 | ஆம்னி பேருந்துகள் நுழைவு கட்டணம் | ரூ.200/— |
| 2 | இரண்டு சக்கர வாகன அபராத கட்டணம் | ரூ.300/— |
| 3 | மூன்று மற்றம் நான்கு சக்கர வாகன அபராத கட்டணம் | ரூ.500/— |
| 4 | புகை பிடித்தல் மற்றும் திறந்த வெளியில் சிறுநீர் கழித்தல் அபராத கட்டணம் | ரூ.100/— |

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டல அலுவலகத்திற்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள ஆம்னி பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் ஆம்னி பேருந்துகளுக்கு வாகனம் ஒன்றுக்கு 24 மணி நேரத்திற்கு ரூ.200/— என கட்டணம் நிர்ணயம் செய்யவும், மேலும் புதிய பேருந்து நிலையத்தில் இரு சக்கரம் மற்றும் நான்கு சக்கர வாகனங்களை வாகன காப்பகத்தில் நிறுத்தம் செய்யாமல் புதிய பேருந்து நிலைய வளாகத்திற்கு நிறுத்தம் செய்து விட்டு செல்வதால் பாதசாரிகளுக்கும், பிரயாணிகளுக்கும் இடையூறாக இருப்பதால், அதனை கட்டுப்படுத்தும் வகைக்கு அங்ஙனம் நிறுத்தும் இரு சக்கர வாகனங்களுக்கு ரூ.300/—ம், மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கு அபராத தொகையாக ரூ.500/— மற்றும் பேருந்து நிலைய வளாகத்திற்குள் புகை பிடித்தல் மற்றும் சிறுநீர் கழித்தால் ரூ.100/— அபராதம் விதித்திட மாமன்றம் முடிவு செய்யலாம்.

தீர்மானம் எண் 15

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் அ1/10434/2018—மே.பா.)

---

8) தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசாணை G.O.(Ms) No.84. நாள் 25.06.2016 —ன் அறிவிப்பின்படி 01.01.2019 முதல், தமிழகத்தில், ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படும்

1) பிளாஸ்டிக் கேரிபேக்
2) உணவு பொருட்கள் பொதிய பயன்படுத்தும் பிளாஸ்டிக் ஷீட்கள்
3) சாப்பாடு மேஜையில் விரிக்க பயன்படுத்தும் பிளாஸ்டிக் ஷீட்கள்
4) பிளாஸ்டிக் தட்டுகள்
5) பிளாஸ்டிக் மூலாம் பூசப்பட்ட தேநீர் குவளைகள்
6) பிளாஸ்டிக் டம்ளர்கள்
7) தண்ணீர் பாக்கெட்டுகள்
8) பிளாஸ்டிக் உறிஞ்சி குழல்கள்
9) பிளாஸ்டிக் கொடிகள்

ஆகியவற்றால் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் கேடுகளை கருத்திற்கொண்டும், பொது சுகாதாரத்திற்கும், ஏற்படும் அபாயத்தை கருத்திற்கொண்டும், அதனால் மனித உயிரினத்திற்கும் விலங்குகளுக்கும், ஏற்படும் தீய விளைவுகளை கருத்திற்கொண்டும், பாதாள சாக்கடைகள் மழைநீர் வடிகால்களில் ஏற்படும் அடைப்புகளை கருத்திற்கொண்டும், நீர் நிலைகள் மாசுபடுவதை கருத்திற்கொண்டும், மேற்கூறப்பட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்வது, சேமிப்பது, விநியோகிப்பது விற்பனை செய்வது, பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

அதன்படி திருநெல்வேலி மாநகராட்சி, எல்கைக்குள் மேற்குறிப்பிட்டுள்ள பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி செய்வது, சேமிப்பது, விநியோகிப்பது விற்பனை செய்வது, பயன்படுத்துவது ஆகியவற்றை 01.01.2019 முதல் தடை செய்ய திருநெல்வேலி மாநகராட்சி மாமன்றம் 10.09.2018 தீர்மானம் எண் 79 மூலம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தற்போது, தமிழக அரசு, மேற்படி தடை செய்யப்பட்ட, ஒரு முறை பயன்படுத்தி தூக்கியெறியும் பிளாஸ்டிக் பொருட்களை உற்பத்தி செய்தல், சேமித்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் ஆகியவற்றிக்கு தண்டத் தொகை/நிர்ணயித்து, திருநெல்வேலி மாநகராட்சிக்கு பொருந்தும் கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 1981–ல் கீழ்கண்டவாறு, சட்ட திருத்தங்கள் மேற்கொண்டு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

திருநெல்வேலி மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்:

14) 1981ம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்திற்கான திருத்தங்கள்

1981 ஆம் ஆண்டு, கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டத்தின் 432 ஆம் பிரிவில், இதில் பின்பு இந்தப் பகுதிகளில் 1981 சட்டமென சுட்டப்பட்டவாறும் 432 ம் பிரிவு (30) ஆம் கூறுக்குப் பின்பு, பின்வரும் கூறு ‘புகுத்துதல்’ வேண்டும் அதாவது,

(30A) பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி எறிகின்ற நெகிழியை (Plastics) சேமித்து வைத்தலை, வழங்குதலை, கொண்டு செல்லுதலை, விற்பனை மற்றும் பகிர்ந்தளித்தலை தடை செய்வதற்காக.

15) 1981ம் ஆண்டு சட்டத்தின் 434ம் பிரிவில் (1) (a) கூறில் ‘நூறு ரூபாய் மற்றும் ‘இருபத்தைந்து ரூபாய்’ எனும் சொற்றொடருக்காக ‘ஆயிரம் ரூபாய்’ மற்றும் ‘இருநூற்று ஐம்பது ரூபாய்’ எனும் சொற்றொடரை முறையே மாற்றாக அமைத்தல் வேண்டும்.

(2) (b) கூறில் ‘இருபது ரூபாய்’ எனும் சொற்சொறடருக்கு ‘இருநூறு ரூபாய்’ எனும் சொற்றொடரை மாற்றாக அமைத்தல் வேண்டும்.

16) 1981ம் ஆண்டு சட்டத்தின், 434 ஆம் பிரிவிற்குப், பின்வரும் பிரிவை, புகுத்துதல் வேண்டும். அதாவது 432A–பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை தடை செய்வதற்காக, இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டம் 432 ஆம் பிரிவின் (30– A) கூறின் படி துணை விதியை இயற்றுகையில் 434 ஆம் பிரிவில் எது எவ்வாறு காணப்படினும் குழுவானது துணை விதிகளை மீறுகின்ற நபர் எவரும் VI-A ஆம் இணைப்பு பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள குழுவில் நிர்ணயம் செய்யலாகும் தொகைக்கு, ‘மிகாத’ பணத்தண்டம் என்ற முறையில் செலுத்துவதற்க்கு ‘கட்டுப்பாடு உடையவராதல் வேண்டும்’ என்பதற்கு வகை செய்யலாம், நபர் நான்காவது முறையாக மீறு வாரானால் இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள, வணிக உரிமத்தை இரத்து செய்தல் வேண்டும்.

1981ம் ஆண்டு சட்டத்தின் VI ஆம் இணைப்பு பட்டியலுக்கு பின்பு, பின்வரும் இணைப்பு பட்டியலை புகுத்துதல் வேண்டும். அதாவது 434– A பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை தடை செய்வதற்காக இயற்றப்பட்ட துணை விதிகளை மீறுவதற்கான தண்டம்

432 ஆம் பிரிவின் (30– A) கூறின் படி துணை விதியை இயற்றுகையில் 434 ஆம் பிரிவில் எது எவ்வாறு காணப்படினும் குழுவானது துணைவிதிகளை மீறுகின்ற நபர் எவரும், VI-A ஆம் இணைப்பு பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள, குழுவால் நிறுவனம் செய்யலாகும் தொகைக்கு, மிகாத ‘பணத்தண்டம்’ என்ற முறையில் செலுத்துவதற்க்கு ‘கட்டுப்பாடு உடையவராதல் வேண்டும்’, என்பதற்கு வகை செய்யலாம், நபர் நான்காவது முறையாக மீறுவாரானால் இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்டுள்ள வணிக உரிமத்தை ரத்து செய்தல் வேண்டும்.

1981 ம் ஆண்டு சட்டத்தில் VI ஆம் இணைப்பு பட்டியலுக்கு பின்பு, பின்வரும் இணைப்பு பட்டியலை புகுத்துதல் வேண்டும்.

அதாவது

இணைப்பு பட்டியல் VI-A பிரிவு 432 (30– A) இன் படி இயற்றப்பட்ட
துணை விதிகள் மீறுவதற்கான தண்டங்கள்

| வ. எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 25,000 இருபந்தைதாயிரம் ஆயிரம் | ரூ.50,000 ஐம்பது ஆயிரம் | ரூ.1,00,000 ஒரு இலட்சம் |
| 2 | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருட்கள் அங்காடிகள் போன்ற மிகப் பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.10,000 பத்தாயிரம் ரூபாய் | ரூ.15,000 பதினைந்தாயிரம் ரூபாய் | ரூ.25,000 இருபத்தைந் தாயிரம் ரூபாய் |
| 3 | மளிகை கடைகள் மற்றும் மருந்து கடைகள் போன்ற நடுந்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை பயன்படுத்துதுல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.1000 ஆயிரம் ரூபாய் | ரூ.2000 இரண்டாயிரம் ரூபாய் | ரூ.5000 ஐந்தாயிரம் ரூபாய் |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்களால் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.100 ஒருநூறு ரூபாய் | ரூ.200 இருநூறு ரூபாய் | ரூ.500 ஐநூறு ரூபாய் |

என்ற திருத்த அறிவிப்பு வெளியிட்டபபட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு

தமிழக அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை, அரசாணை எண் G.O.(Ms) No.84 நாள் 25.06.2018–ன் அறிவிப்பின்படி 01.01.2019 முதல், தமிழகத்தில் ஒருமுறை பயன்படுத்தி தூக்கியெறிப்படும் 14 பிளாஸ்டிக் பொருட்களுக்கு, ‘தடை’ விதிக்கப்பட்டுள்ளது. மேற்படி, தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை, உற்பத்தி செய்தல், சேமித்தல், விநியோகித்தல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு, கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு தண்டத்தொகை வசூல் செய்யவும், நான்காவது நிகழ்விற்கு மாநகராட்சியால் வழங்கப்பட்ட வணிக உரிமத்தை ரத்து செய்யவும், பிளாஸ்டிக் கழிவு துணைவிதிகள் 2016–ல் அரசு அறிவித்துள்ள கீழ்கண்ட தண்டத் தொகை அட்டவணையை சேர்த்திடவும், மேற்படி துணைவிதிகளில் ஏற்கனவே, உள்ள தண்டத் தொகை அட்டவணையை நீக்கி விடவும் மாமன்றம் தீர்மானிக்கலாம்.

இணைப்பு பட்டியல் VI-A பிரிவு 432 (30– A) இன் படி இயற்றப்பட்ட
துணை விதிகள் மீறுவதற்கான தண்டங்கள்

| வ. எண் | குற்றங்கள் | முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் | மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை சேமித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ. 25,000 இருபந்தைதாயிரம் ஆயிரம் | ரூ.50,000 ஐம்பது ஆயிரம் | ரூ.1,00,000 ஒரு இலட்சம் |
| 2 | வணிக வளாகங்கள் துணிக் கடைகள் மற்றும் பல்பொருட்கள் அங்காடிகள் போன்ற மிகப் பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை பயன் படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.10,000 பத்தாயிரம் ரூபாய் | ரூ.15,000 பதினைந்தாயிரம் ரூபாய் | ரூ.25,000 இருபத்தைந் தாயிரம் ரூபாய் |
| 3 | மளிகை கடைகள் மற்றும் மருந்து கடைகள் போன்ற நடுந்தர வணிக நிறுவனங்களில் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை பயன் படுத்துதுல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.1000 ஆயிரம் ரூபாய் | ரூ.2000 இரண்டாயிரம் ரூபாய் | ரூ.5000 ஐந்தாயிரம் ரூபாய் |
| 4 | சிறிய வணிக விற்பனையாளர்களால் பயன்படுத்தி தூக்கி வீசப்படும் நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் | ரூ.100 ஒருநூறு ரூபாய் | ரூ.200 இருநூறு ரூபாய் | ரூ.500 ஐநூறு ரூபாய் |

## SCHEDULE VI-A
## Penalties for breach of by-laws made under section 432 (30A-)

| Sl. No | Offences. | Fine for first time offence | Fine for Second time offence | Fine for third time offence |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | Storage, supply, transport, sale and distribution of use and throwaway plastics | Twenty five thousand rupees | Fifty thousand rupees | One Lakh rupees |
| 2 | Use and distribution of use and throwaway plastics in large commercial establishments like malls, textile shops and super markets. | Ten thousand rupees | Fifteen thousand rupees | Twenty five thousand rupees |
| 3 | Use and distribution of use and throwaway plastics in medium commercial establishments like grocery shops and pharmaceuticals shops | One thousand rupees | Two thousand rupees | Five thousand rupees |
| 4 | Use and distribution of use and throwaway plastics in small commercial vendors | One hundred rupees | Two hundred rupees | Five hundred rupees |

தீர்மானம் எண் 16

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(H4/4317/2018)

---

9) திருநெல்வேலி மாநகராட்சிக்கு திருநெல்வேலி வார்டு அலுவலகத்திற்குட்பட்ட பேட்டை – பழைய பேட்டை இணைப்புச் சாலையில் உள்ள ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் மூன்றாண்டு கால உரிமத்திற்கு கடந்த 30.11.2018, 14.12.2018, 02.01.2019, 25.01.2019, 12.02.2019, 26.02.2019 ஆகிய தேதிகளில் 6 முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் யாரும் கலந்து கொள்ள முன்வரவில்லை. தற்போது ஏழாவது முறையாக 18.06.2019 தேதியில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நிர்ணயிக்கப்பட்டு, செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி மூலமாக தினத்தந்தி நாளிதழில் கடந்த 07.06.2019–ம் தேதியில் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்யப்பட்டது. மேலும் மாநகராட்சியில் நான்கு மண்டல அலுவலகங்களில் விளம்பர பலகைகளிலும் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. மொத்தம் 7 நபர்களால் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நமுனாக்கள் விலைக்கு பெறப்பட்டது.

ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நாளன்று முதலில் ஏலம் நடத்தப்பட்டது. ஏலத்தில் கீழ்க்கண்ட இருநபர்கள் கலந்து கொண்டனர்.

ஏலக் கேள்விகள் விபரம் (குறுமத் தொகை : ரூ.4,75,000/–)

| வ. எண். | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி | செலுத்திய வைப்புத் தொகை / சால்வன்சி தொகை விபரம். ரூ | ஓர் ஆண்டிற்கான ஏல கேள்வி தொகை. ரூ |
|---|---|---|---|
| 1 | திரு.எஸ்.பி.மகாராஜா,<br>த/பெ.(லேட்) எஸ்.பி. பாண்டியன்,<br>30 அம்மன் கோயில் தெரு,<br>பவுண்ட் ரோடு,<br>மேலப்பாளையம் | 1) ரூ.1,20,000/–<br>City Union Bank,<br>Tirunelveli Junction,<br>DD.No. 6000080 , Dated : 15.06.2019<br>2) சால்வன்சி சான்று மதிப்பு<br>ரூ.65,00,000/- date: 6.05.19<br>TN -1720190322103 | **Rs.5,01,000/-** |
| | திருமதி.எஸ்.பி.சாந்தி,<br>க/பெ. (லேட்) எஸ்.பி.பாண்டியன்<br>5–9 பெருமாள் வடக்கு ரதவீதி<br>திருநெல்வேலி ஜங்ஷன். | 1) ரூ.1,20,000/–<br>IOB , Tirunelveli Junction,<br>DD.No. 223524 , Dated : 15.06.2019<br>2) சால்வன்சி சான்று மதிப்பு<br>ரூ.41,00,000/- dated : 27.02.2019<br>TN-1720190314102 | **Rs.4,92,000/-** |

ஏலம் முடிவடைந்ததும் வருகை தந்த ஏலதாரர்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் ஒப்பந்தப்புள்ளி பெட்டி திறக்கப்பட்டது. ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை.

மேற்காணும் விபரப்படி ஏலத்தில் கலந்து கொண்ட இருவரின் ஏலக் கேள்விகள் ஒப்பிட்டு நோக்கியதில் திரு.எஸ்.பி.மகாராஜா என்பவரால் கேட்கப்பட்ட ரூ.5,01,000/– (ரூபாய் .ஐந்து இலட்சத்து ஆயிரம் மட்டும்)–க்கான உயர்கேள்வி, குறுமத்தொகையை விட ரூ.26,000/– கூடுதலாக உள்ளது,

எனவே உயர்ஏல கேள்விதாரர் திரு.எஸ்.பி.மகாராஜா என்பவரின் உயர்ஏலக் கேள்வி ரூ..5,01,000/– (ரூபாய் ஐந்து இலட்சத்து ஆயிரம் மட்டும்) ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் மற்றும் முடிவிற்கும்.

அலுவலக குறிப்பு :

திருநெல்வேலி பேட்டை – பழையபேட்டை இணைப்பு சாலையில் புதிதாக கட்டப்பட்ட ஆடறுப்பு மனையில் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு காலத்திற்கு ஆறு முறை ஏலம் – ஒப்பந்தப்புள்ளிக்கு விடப்பட்டும் யாரும் உரிமத்திற்கு எடுக்க முன்வரவில்லை. ஏழாவது முறையாக மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் மூலமாக தினத்தந்தி நாளிதழில் 07.06.2019 ல் விளம்பரப்படுத்தப்பட்டதில் மொத்தம் 7 நமுனாக்கள் விற்பனையானதில் பொருளில் குறிப்பிடப்பட்ட இருவர் மட்டும் ஏலத்தில் கலந்து கொண்டனர். ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்பெறவில்லை.

எனவே, கடந்த 6 முறை ஏலம் / ஒப்பந்தப்புள்ளிக்கு கோரப்பட்டதில் ஒருவரும் கலந்து கொள்ளாததை கருதியும், ஆடறுப்பு மனையின் மூலம் வரப்பெறும் வருவாயினை கருதியும், ஏலக்கேள்விகளில் ஆண்டிற்கு ரூ.5,01,000/–ற்கு (ரூபாய் ஐந்து இலட்சத்து ஆயிரம் மட்டும்) உயர் ஏலக் கேள்வி கேட்டுள்ள திரு.எஸ்.பி.மகாராஜா என்பவரின் உச்சகேள்வி தொகையினை ஒப்புக் கொள்ளவும், அரசாணை எண் 78, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 25.05.2019–இல் கண்டுள்ள பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளின்படியும் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு உரிமம் அனுபவித்து கொள்ள அனுமதித்தும் மாமன்றம் தீர்மானிக்கலாம்.

தீர்மானம் எண் 17

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(அ1/1390/2016–திலி)

---

10) மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியம் திருநெல்வேலி அவர்களின் கடிதம் DEE/TNPCB/TNV/F.Tech-14/CAAQMS/TNV/2018, Dated 1.2.2019–ல் கேட்டுக்கொண்டத்தின்படி திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட மைய அலுவலக வளாகத்தில் மேற்கு வாயிற் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் 5.30மீ X 4.30மீ அளவில் தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியத்தினர் Continuous Ambient Air Quality Monitoring Station (CAAQMS) அதற்கான Equipments/ Instruments–களை பொருத்தி பயன்படுத்திக்கொள்ள மைய அலுவலக உதவி செயற்பொறியாளரின் (திடக்கழிவு மேலாண்மை) அறிவுரையின்படி இட ஒதுக்கீடு செய்யலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

அவ்வாறு இடம் ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் மாதாந்திர தரை வாடகை நிர்ணயம் செய்திட பொதுப்பணித்துறையினரை கேட்டுக்கொள்ளப்பட்டதில், திருநெல்வேலி பொது பணித்துறை செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட ஆணை எண் HDO (B)/65325/2001, dated 14.08.2018–ல் பெறப்பட்ட விலை விகித அட்டவணையின் அடிப்படையில் மாதாந்திர தரைவாடகையாக ரூ5500.00 (ரூபாய் ஐந்தாயிரத்து ஐந்நூறு மட்டும்) என தச்சநல்லூர் உதவி செயற்பொறியாளர் மற்றும் உதவி ஆணையாளர் ஆகியோரால் நிர்ணயம் செய்யலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட மைய அலுவலக வளாகத்தில் மேற்கு வாயிற் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் 5.30மீ X 4.30மீ அளவில் தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியத்தினர் Continuous Ambient Air Quality Monitoring Station (CAAQMS) அதற்கான Equipments/Instruments–களை பொருத்தி பயன்படுத்திக்கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளை விதிக்கலாம்.

நிபந்தனைகள்:

1. பிரதி மாதம் 5ம் தேதிக்குள் மேற்படி வாடகை தொகையை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டும்.
2. மாநகராட்சி கட்டிடத்திற்கு எவ்வித சேதாரமும் இல்லாமல் மேற்படி மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தினரால் பராமரிக்கப்பட வேண்டும்.
3. மேற்படி இடத்தினை மேற்கண்ட அலுவலகப் பணிகளுக்கு அல்லாமல் வேறு உபயோகமாக பயன்படுத்தக் கூடாது..
4. இந்த அனுமதியினை முன்வைத்து மாநகராட்சி கட்டிடத்திற்கு எவ்வித முன்னுரிமை மற்றும் சொந்தம் கொண்டாடக்கூடாது.
5. மேற்படி இடம் மாநகராட்சிக்கு தேவைப்படும் நேரத்தில் ஒப்படைக்க வேண்டும்.
6. அலுவலகத்திற்கு தேவைப்படும் தளவாட சாமான்களை வாரியமே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
7. தமிழ்நாடு மின்வாரியத்தால் அவ்வப்போது அறிவிக்கப்படும் மின்கட்டணங்கள் மற்றும் வைப்புத்தொகை, கூடுதல் வைப்புத்தொகைகளை வாரியத்தால் மின்வாரியத்திற்கு ஆணையாளர் பெயரில் செலுத்தப்படல் வேண்டும்.
8. கட்டிடம் ஒப்படைக்கும் பொழுது இருந்த நிலையிலேயே, மாநகராட்சிக்கு மீள ஒப்படைக்கும் பொழுது இருத்தல் வேண்டும்.
9. இக்கட்டிடத்தில் தங்களது சொந்த செலவில் தேவையான மராமத்து வேலைகளை செய்து கொள்ளவேண்டும்.

மேற்படி நிபந்தனைகளுக்குட்பட்டு 01.06.2019 முதல் மேற்படி இடத்தினை ஒதுக்கீடு செய்து மாதாந்திர தரைவாடகையாக ரூ.5500/– (ரூபாய் ஐந்தாயிரத்து ஐந்நூறு மட்டும்)–ஐ மாநகராட்சியால் நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்டுள்ளவாறு, திருநெல்வேலி மாநகராட்சி, தச்சநல்லூர் மண்டலத்திற்கு உட்பட்ட வார்டு எண் 5–ல் அமைந்துள்ள மைய அலுவலக வளாகத்தில் மேற்கு வாயிற் அருகில் புதிதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தின் முதல் தளத்தில் 5.30மீ X 4.30மீ அளவு இடத்தினை தமிழ்நாடு மாசுக்கட்டுபாட்டு வாரியத்தினர் Continuous Ambient Air Quality Monitoring Station (CAAQMS) அதற்கான Equipments/Instruments–களை பொருத்தி பயன்படுத்திக் கொள்ள 1–6–2019 முதல் மாதாந்திர வாடகையாக ரூ5500.00 (ரூபாய் ஐந்தாயிரத்து ஐந்நூறு மட்டும்)–ஐ மாநகராட்சி வசம் பிரதி மாதம் 5ம் தேதிக்குள் செலுத்திட வேண்டும் என்ற அடிப்படையில் ஆணையாளர் (ம) தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று மாநகராட்சி இடத்தினை இட ஒதுக்கீடு செய்தமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 18

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் 1831/19/இ1–தச்சை)

---

11) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 34, மேலக்கருங்குளம் பகுதியில் ராஜாஜி சாலை, வடக்கு பாகவதர் தெரு, சிவாஜி நகர் ஆகிய இடங்களில் 7 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் இல்லாமல் இருப்பதால் மேற்குறிப்பிட்ட 7 எண்ணம் மின்கம்பங்களில் தமிழ்நாடு மின்வாரியத்தின் மூலமாக தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 7 எண்ணம் 20 W LED விளக்கு பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான செலவு உத்தேசம் ரூ.80,000/– (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 7 எண்ணம் மின்கம்பங்களுக்கிடையே தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து அதில் 7 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் உத்தேச செலவு தொகை ரூ.80,000/– (ரூபாய் எண்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 19

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் இ2/3279/19–மே.பா.)

---

12) திருநெல்வேலி மாநகராட்சி, மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 19, ஸ்ரீராம் நகர், அதுரா கிளேசியர் குடியிருப்பு, ராயல் காலனி மேற்கு பகுதியை சார்ந்த பொதுமக்கள் புதிய தெருவிளக்கு வசதி ஏற்படுத்தி தரக்கேட்டுள்ள விண்ணப்பத்தின்படி இப்பகுதியில் ஏற்கனவே அமைந்திருக்கும் 21 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 21 எண்ணம் 20 W LED விளக்கு பொருத்திடவும், மின்கம்பம் எண் 1037–க்கு அடுத்து புதியதாக ஒரு மின்கம்பம் அமைத்து அதில் ஒரு 20 W LED விளக்கு பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான செலவு உத்தேசம் ரூ.2,20,000/– (இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 21 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 21 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும், புதியதாக ஒரு மின்கம்பம் அமைத்து அதில் ஒரு 20 W LED விளக்கு பொருத்திடவும் ஆக மொத்தம் 22 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திட ஆகும் செலவு மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான உத்தேச செலவுத் தொகை ரூ.2,20,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து இருபதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 20

அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ2/838./19–மே.பா.)

---